# குழந்தையொன்றின் உள்ளடங்கல் கல்விக்காக பாடசாலை வழங்கும் அர்ப்பணிப்பு



“எனது மகனுக்கு உதவுவதற்காக, நாளொன்றில் மூன்று தடவைகள் நான் பாடசாலைக்குச் செல்வேன். அவர் பாடசாலைக்கு செல்வதற்கு தயாராவதற்காக, அதிகாலையிலேயே நான் அவருக்கு உதவுவதோடு, அவரை பாடசாலைக்கு அழைத்துச் செல்வேன். இப்போது அவர் இளைய மாணவர் தலைவர் என்பதால், ஏனைய மாணவர்களுக்கு முன்னராக அவர் பாடசாலைக்குச் செல்ல வேண்டும். இடைவேளைக்கு முன்னராக மீண்டும் நான் பாடசாலைக்கு வந்து, என் மகன் மலசலகூடம் செல்வதற்கு உதவுவேன். பாடசாலை நிறைவடைவதற்கு 5 நிமிடங்களுக்கு முன்னராக நான் வந்து, மகனை அழைத்துச்செல்வேன்” என தரம் நான்கில் கல்வி கற்கும் மாணவர் ஒருவரின் தாய் குறிப்பிட்டார். அவரது மகன் லஹிருவின் விசேட தேவைக்கு இணங்க அவர் பாடசாலை செல்லும் வழிமுறைகள் பற்றி நாம் தேடிப்பார்த்தோம்.

“என்னால் வரமுடியாவிட்டால், எனது உறவினர்களில் ஒருவர், வகுப்பாசிரியர், பாடசாலை உத்தியோகத்தர்களில் ஒருவர் அல்லது ஒரு பெற்றோர் இவருக்கு உதவுவர்“ என லஹிருவின் தாயார் எம்மிடம் குறிப்பிட்டார். “ஆசிரியர்களும் அதிபர்களும் என்னுடன் அடிக்கடி கலந்துரையாடுவார்கள். லஹிருவின் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கு அவசியமான மாற்றங்கள் உடனடியாக மேற்கொள்ளப்படுகின்றன.

"பாடசாலை நுழைவாயிலுக்கு அருகிலுள்ள வகுப்பறையை, எனது மகன் கல்வி கற்கும் வகுப்பிற்கு பாடசாலை அதிபர் கொடுத்தார். தரம் மூன்றிலும் நான்கிலும் அவர் அந்த வகுப்பறையிலேயே கல்வி கற்கின்றார். ஏனைய தரம்-4 வகுப்புகள் மேல்மாடியில் இடம்பெறுகின்றன. ஆனால், என் மகனுக்கு படிக்கட்டுகளில் ஏறிச்செல்ல முடியாது"

லஹிரு, கைகள் மற்றும் கால்களில் உடல் ரீதியான இயலாமையை கொண்ட சிறுவன் ஆவார். இப்போது அவருக்கு ஒன்பது வயதாகின்றது. தொடர் மருத்துவ அறுவைச் சிகிச்சைகளின் பின்னர் அவர் இப்போது ஒருஜோடி செயற்கைக் கால்களின் துணையுடன் மகிழ்ச்சியாக நடக்கின்றார். எனினும், படிக்கட்டுக்களில் ஏறிச்செல்லல் போன்ற சில பிரச்சினைகளை அவர் இன்னும் எதிர்கொள்கின்றார்.

எதிர்காலத்தில் தனது செயற்பாடு மேலும் வலுப்பெறும் என்ற நம்பிக்கையுடன், "என்னால் இப்போது ஓடவும் முடியும்" என்கிறார் லஹிரு.

"லஹிரு இந்த பாடசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர், ஏனைய மாணவர்கள் கற்கும் வகுப்பறையில் அவரால் கல்விகற்க முடியுமா என்ற கேள்வி எழுந்தது. எனினும், ஏனைய சவால்களை வெற்றிகொண்டு அவருக்கு சமமான வாய்ப்புகளை வழங்க வேண்டுமென நாம் தீர்மானித்தோம். லஹிரு கல்விகற்கும் வகுப்பினை, அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களிடமே எப்போதும் ஒப்படைத்தோம். அத்தோடு, அவருக்கு உதவுவதற்காக ஏனைய ஆசிரியர்கள், கல்விசாரா உத்தியோகத்தர்கள், ஏனைய மாணவர்கள் மற்றும் பெற்றோருக்கு தெளிவூட்டினோம்," என லஹிரு கல்விகற்கும் பாடசாலையின் ஆரம்பப் பிரிவிற்குப் பொறுப்பான பிரதி அதிபர் குறிப்பிட்டார்.

கல்வி கற்போர் அனைவரும் பிரதான கல்வியை அணுக முடிவதை உறுதிசெய்யும் அணுகுமுறைகள் மற்றும் முறைமைகளைக் கொண்டதே உள்ளடக்கிய கல்விச்செயற்பாடு என வரையறுக்க முடியும். கல்விகற்கும் அனைவரும் வரவேற்கப்பட்டு அவர்கள் பெறுமதிவாய்ந்தவர்களாக உணரவும், அவர்களது திறமைகளை வளர்த்துக்கொள்ளவும், இலக்குகளை அடையவும், அவர்கள் சரியான உதவியை பெற்றுக்கொள்ளவும் ஒவ்வொருவரும் பாடுபடுகின்றனர். கல்வி முறையானது உண்மையாகவே உள்ளடங்கல் தன்மையைக் கொண்டிருக்கும் பட்சத்தில், குறைபாடுடைய மாணவர்கள் மட்டுமன்றி சகல மாணவர்களுக்கும் அது பயனளிக்கும்[1].

---

[1] https://www.allfie.org.uk/definitions/what-is-inclusive-education/

"நாம் அனைவரையும் உள்ளடக்குவதோடு, குறைபாடுகள் காரணமாக எந்த குழந்தையும் கைவிடப்படக் கூடாது. இதன் காரணமாக, பாடசாலையில் குறைந்த வசதிகள் காணப்படுகின்ற போதும் லஹிருவிற்காக எம்மால் முடிந்த சகல விடயங்களையும் செய்கின்றோம். இது எமது கடமை" என லஹிரு கல்விகற்கும் பாடசாலையின் அதிபர் குறிப்பிட்டார்.

"எனக்கு பல சலுகைகளை இந்தப் பாடசாலை வழங்கியுள்ளது" என லஹிருவின் தாய் குறிப்பிட்டார். அவசியம் ஏற்படும் சந்தர்ப்பங்களில் எல்லாம் நான் பாடசாலைக்கு வர அனுமதி வழங்கியுள்ளனர். பாடசாலைக்குள் மட்டுமன்றி, லஹிருவின் வகுப்பறைக்கு மிக அருகில் எனது முச்சக்கரவண்டியை ஏனைய குழந்தைகளுக்கு பாதிப்பின்றி ஓட்டுவதற்கும் அனுமதி வழங்கியுள்ளனர். இது எனது மகனுக்கு பாரிய உதவியாகும்.

"தரம் ஒன்றிற்காக ஒதுக்கப்பட்ட இந்த வகுப்பறையினை தரம் 4 மாணவர்களுக்கு ஏற்ற வகையில் மீள வடிவமைக்க வேண்டும். லஹிருவின் தேவைகள் குறித்து நாம் ஏனைய மாணவர்களுக்கும் அந்த மாணவர்களின் பெற்றோருக்கும் தெளிவூட்டியிருப்பதால், பிரச்சினைகளை தீர்ப்பதில் அவர்கள் மகிழ்ச்சியுடன் பங்களிப்புச் செய்கின்றனர். லஹிருவின் கல்வித் தேவைகள் பற்றியும் அவரது உரிமைகள் தொடர்பாகவும் நாம் அவர்களுக்கு உணர்திறன்மிக்க வகையில் குறிப்பிட்டுள்ளோம்" என லஹிருவின் வகுப்பாசிரியர் குறிப்பிட்டார்.

"இந்த வகுப்பறையிலுள்ள மாணவர்களுக்கான கதிரைகளும் மேசைகளும் லஹிருவிற்கு வசதியாக இல்லை. எனவே, லஹிரு இலகுவாக உட்காரவும், எழுந்து நிற்கவும் ஏற்ற வகையிலான மேசையும் கதிரையும் வடிவமைக்கப்படுகின்றன. இதற்காக பாடசாலை சமூகம் உதவுகின்றது," என அதிபர் கூறினார்.

"நாங்கள் அனைவரும் லஹிருவின் நண்பர்கள்" என, லஹிருவின் வகுப்பில் அவருக்கருகில் அமர்ந்திருக்கும் சமோதி குறிப்பிட்டார். "நாம் லஹிருவிற்கு உதவுவதோடு, அவரும் எமக்கு உதவுவார்."

பாடசாலை நுழைவாயிலுக்கு அருகாமையிலுள்ள வகுப்பறையை லஹிருவிற்கு ஒதுக்கியபோதும் துரதிஷ்டவசமாக, மலசலகூடத்திற்குச் செல்லும் தூரம் அதிகமாக காணப்படுகின்றது.

"ஓய்வு நேரத்தில் மாணவர்கள் அங்கும் இங்கும் ஓடுவார்கள். ஆகவே, இடைவேளைக்கு முன்னராக பாடசாலைக்கு வந்து லஹிருவிற்கு உதவுமாறு,

நான் அவரது தாய்க்கு அறிவுறுத்தியுள்ளேன்," என ஆசியர் கூறினார். லஹிருவினதும் ஏனைய குழந்தைகளினதும் சுதந்திரம் கருதி இத்தகைய திட்டங்களை பாடசாலை மேற்கொண்டுள்ளது. லஹிரு செயற்கைக் கால்களை அணிந்திருப்பதால் அவர் நடக்கும்போது சமநிலையை பேண வேண்டும். இடைவேளையின் போது விளையாடிக்கொண்டிருக்கும் குழந்தையின் மீது லஹிரு மோதினால், தனது சமநிலையை இழக்க நேரிடலாம்.

இலங்கையிலுள்ள பெரும்பாலான பாடசாலைகளின் சுகாதார வசதிகள் மிகவும் அடிப்படையிலான நிலையிலேயே உள்ளன. கொமட் வசதியுடைய மலசலகூடமே லஹிருவிற்கு உகந்தது. எனினும், அவ்வாறான வசதியினை பாடசாலை இன்னும் மேற்கொள்ளவில்லை.

"லஹிரு எல்லா துறைகளிலும் சிறந்து விளங்கும் ஒரு மாணவன். உடல்ரீதியான குறைபாடுகள் காரணமாக முடங்கியிருக்காமல், கடிதங்கள் எழுதுதல், சித்திரம் வரைதல், செயற்பாடுகள் மற்றும் விளையாட்டுக்களில் பங்கேற்றல் என அவர் எல்லா விடயங்களையும் மேற்கொள்கின்றார். ஏனைய பிள்ளைகள் செய்யும் செயற்பாடுகள் அனைத்தையும் செய்ய இவர் முயற்சிக்கின்றார். அதற்குத் தேவையான சகல விடயங்களையும் நாம் செய்துகொடுக்கின்றோம்" என வகுப்பாசிரியர் கூறினார்.

சிங்கள இலக்கியத்திலுள்ள ஒரு கவிதையில், 'இந்த உலகத்தில், ஒரு விடயம் ஒன்றிற்கு சரியாக அமையும் – அத்தோடு, இன்னொரு விடயம் இன்னொன்றிற்கு சரியாக அமையும்' என கூறப்பட்டுள்ளது. ஒருவரது திறனை வெளிப்படுத்துவதற்கு, உடல்ரீதியான குறைபாடுகள் தடையாக அமையக்கூடாது. அதன் காரணமாகத்தான் எமக்கு உள்ளடங்கல் கல்வி அவசியமானது" என அதிபர் தெரிவித்தார்.

"நான் ஒரு பொறியியலாளராக வரவேண்டுமென விரும்புகின்றேன்" என்றார் லஹிரு. தனது கையடக்க தொலைபேசியில் சேமித்து வைத்திருந்த சில புகைப்படங்களை எமக்குக் காட்டிய லஹிருவின் ஆசிரியர், தற்போதும் அவர் இலத்திரனியல் உபகரணங்களுடன் விளையாடுவதாக எம்மிடம் கூறினார்.

"லஹிருவிற்கு நிறைய கனவுகள் உள்ளன. எல்லா விடயங்களையும் செய்ய அவர் விரும்புகின்றார். என்னால் முடிந்தவற்றை நான் அவருக்காக செய்கின்றேன். எனது சுமைகளில் பாதியை பாடசாலை சுமக்கின்றதையிட்டு நான் பெருமைகொள்கின்றேன். லஹிருவை கைவிடாமல் பார்த்துக்கொள்வது மிகவும் அவசியமாகும்" என லஹிருவின் தாய் குறிப்பிட்டார்.

குறைபாடுகள் காரணமாக எந்தவொரு குழந்தையும் ஓரங்கட்டப்படக் கூடாது. அனைத்து பின்னணிகளையும் கொண்ட குழந்தைகளும் ஒன்றாக கல்வி கற்கவும் வளரவும் உள்ளடங்கல் கல்வி வழிசமைப்பதோடு, இது அனைவருக்கும் நன்மையளிக்கின்றது. உள்ளடங்கல் நிலையை மேம்படுத்துவதற்காக பாடசாலைகள் மேற்கொள்ளவேண்டிய பல விடயங்கள் உள்ளன. அவை அனைத்திற்கும் அதிக முதலீடுகள் தேவையில்லை. சிறிய விடயங்கள் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தும். எண்ணங்களிலும் அணுகுமுறைகளிலுமே பெரிய மாற்றங்கள் தங்கியுள்ளன.

யுனிசெஃப் தனது இணையத்தளத்தில் குறிப்பிட்டுள்ளதைப் போன்று, “உலகளாவிய ரீதியில் விசேட தேவைகொண்ட 240 மில்லியன் குழந்தைகள் உள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. எல்லா குழந்தைகளையும் போலவே, விசேட தேவைகொண்ட குழந்தைகளும் தமது எதிர்காலத்திற்கான இலட்சியங்களையும் கனவுகளையும் தன்னகத்தே கொண்டுள்ளன. எனினும், விசேட தேவை கொண்ட குழந்தைகள், கொள்கை வகுப்பின்போது பெரும்பாலும் புறக்கணிக்கப்படுகின்றனர், அவர்கள் கல்வியை பெற்றுக்கொள்வதற்கான வசதி கட்டுப்படுத்தப்படுகின்றது, சமூக, பொருளாதார மற்றும் அரசியல் வாழ்க்கையில் அவர்கள் பங்கேற்கும் திறனும் மட்டுப்படுத்தப்படுகின்றது.”

